[1973 நவம்பர் 22

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வோர் ஆண்டின் தக்கைக் கல் தேவை குறித்து (i) தனியார் துறை (ii) அரசு, (iii) பொதுத்துறை ஆகியவை ஆய்வு நடத்தியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 'பெருஞ் சென்னை' முழுவதிலும், அதாவது தக்கைக்கல் தொழிற்சாலை அமைந்துள்ள எண்ணூரைச் சுற்றி 80 கிலோ மீட்டர் தொலைவுள்ள பகுதியில், தக்கைக்கல் தொழிற்சாலைப் பொருள்கள் தோராயமாக எவ்வளவு தேவைப்படுகின்றன என்பதுபற்றி ஆய்வு செய்யும் பணியை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 'இப்கான்' தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தது.

(இ) வாலாயமான சுட்ட செங்கல் வழங்கும் நிலையில் 1971-76 வரையுள்ள கால அளவில் ஆண்டொன்றுக்கு 100 மில்லியன் செங்கற்கள் பற்றாக் குறை ஏற்படும் என்று மதிப்பிடப்படுவதால், 1.4 லட்சம் கனமீட்டர் தக்கைக் கற்கள் உற்பத்தி முழுவதற்கும் தேவையிருக்குமென இந்த 'ஆய்வு' புலப்படுத்துகிறது.

Subscription to Workers Union.

* 57. *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the scheme providing for taking over the responsibility of paying the subscription of the Industrial workers to their union by the management by reducing the subscription amount from their salaries is implemented in our State; and

(*b*) if so, the industries in which this scheme is implemented among the industries run by the Public Sector, Co-operative Sector and Private Sector?

1973 நவம்பர் 22]

தொழிற் சங்கத்திற்கான உறுப்பினர் கட்டணம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தொழிலாளர்களுடைய சம்பளத்திலிருந்து அவர்களது தொழில் சங்கத்திற்கான உறுப்பினர் கட்டணத்தைப் பிடித்தம் செய்து தருவதை நிர்வாகத்தினரே ஏற்றுக் கொள்கிற வகையிலான திட்டம் நமது மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், பொதுத்துறைத் தொழில்களில், கூட்டுறவுத் துறைத் தொழில்களில், தனியார் துறைத் தொழில்களில் எவை எவைகளில் அமுலாக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

State Housing Board

*58. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the State Housing Board has made any efforts to acquire the lands now in the occupation of the Madras Race Club, Guindy, for putting up housing projects;

(b) if so, the details thereof; and

(c) if not, the reasons therefor?

மாநில வீட்டு வசதி வாரியம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, கிண்டியிலுள்ள சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தின் உடைமையில் தற்போதுள்ள நிலங்களைக் கையகப்படுத்த, மாநில வீட்டு வசதி வாரியத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?